# கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்

வா.சா.1 – சிவக்குமார் OS.No.108/2024 நாள் : 18.02.2026

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

பிரதிவாதியும் எனது மனைவியும் ஒன்றாக வேலை பார்த்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் ஒன்றாக வேலை பார்க்கும்போது பழக்கத்தின் அடிப்படையில்தான் பிரதிவாதி பணம் வாங்கினார் என்றால் சரிதான். தற்போது பிரதிவாதி எங்கு வேலை பார்க்கிறார் என்றால் அவர் பணம் வாங்கும்போது பொய்யாதநல்லூரில் வேலை பார்த்தார். தற்போது எங்கு வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி எவ்வளவு ஊதியம் வாங்குகிறார் என்றும், அவரால் பணத்தை திருப்பி செலுத்த இயலுமா என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை, அவரது மாத வருமானம் 1 லட்சம் என்பதால் நான் அதைப்பற்றி விசாரிக்கவில்லை. பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டவுடனே நான் பணம் கொடுத்துவிட்டேனா என்றால் 1 ½ மாதம், 2 மாதம் கழித்து கொடுத்தேன். பிரதிவாதியிடம் சொத்து விவரம் மற்றும் ஆவணம் ஏதேனும் கேட்டு வாங்கினேனா என்றால் இல்லை. பிரதிவாதியிடம் ரேஷன் கார்டு, ஆதார் கார்டு, சம்பள பட்டியல் முதலானவற்றை கேட்டு வாங்கினேனா என்றால் இல்லை. நான் சொல்வது பொய் என்றும், பிரதிவாதிக்கு 1 லட்சம் சம்பளம் இல்லை என்றும், அந்த 1 லட்சம் சம்பளத்தை பொறுத்து அவர் என்னிடம் கடன் ஏதும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு தாவா புரோநோட்டில் கண்டுள்ள தொகையை கொடுப்பதற்கு எந்த தகுதியும் இல்லை என்றும், தாவா புரோநோட்டில் நானே பிரதிவாதியின் கையெழுத்தை போட்டு பொய்யாக தயாரித்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து, சாட்சிகள், கையொப்பம்

இட்டவர்கள் ஆகியோர் அனைவரும் என் ஆட்களை வைத்து தயார் செய்தேன் என்றும், அப்போது பிரதிவாதி அங்கு இல்லை என்றாலும் சரியல்ல. எனது புரோநோட்டில் கண்டுள்ள தொகையை பிரதிவாதி கொடுக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் பிரதிவாதி வாங்கிய தொகை 3 லட்சம்தான் என்றும், காலம் அதிகமானதால் புரோநோட்டில் கண்டுள்ள தொகையை நானே கூட்டு வட்டி போட்டு மிகைப்படுத்தி எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் கண்டுள்ள தொகை பொய்யானது என்பதாலும், அதிலுள்ள கையெழுத்தும் பிரதிவாதியுடையது இல்லை என்பதாலும், தாவா தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒப்பம்.திருமதி.M.S.மணிமேகலை,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
அரியலூர்.